2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர்மீது காவல் துறையினர் தாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் சிலர்மீது வழக்குப் பதிவு புனையப்பட்டு கைது செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோர் சட்டப் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்துள்ளவர்களில் ஒருவர்சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5-4-2013 அன்று மாலை சுமார் 4-00 மணியளவில் தக்கலை வட்டாரக் குழு அலுவலகத்தில் காவல் உதவி ஆய்வாளர் திரு. சங்கர் அவர்களும், ஆய்வாளர் திரு. சிரில் அவர்கள் உள்ளிட்ட 5 பேர் எங்களது கட்சி அலுவலகத்திற்குள் சென்றிருக்கிறார்கள். அப்போது அங்கு ஒன்றியச் செயலாளராக தோழர் சைமன் சைலஸ் அவர்களும், தோழர்கள் அரங்கசாமி, அணில் குமார் ஆகியோர் இருந்திருக்கிறார்கள். அப்போது அவர்கள், உள்ளே வந்த காவல் துறையினுடைய அதிகாரிகளைப் பார்த்து, என்ன விஷயமாக வந்திருக்கிறீர்கள் என்று கேட்டபொழுது, அவர்கள் மிகுந்த கோபத்தோடு, இங்கே ஒருவர் மறைந்துள்ளார்; அவரைப் பிடிக்க வேண்டுமென்று சொன்னதோடு மட்டுமல்ல, உடனடியாக அங்கு அலுவலகத்தில் இருக்கக்கூடிய பொருட்களைத் தாக்கியும், அங்கு இருந்த தலைவர்களினுடைய புகைப்படங்களை உடைத்தும், அங்கிருந்த டி.வி.-யையும் உடைக்கக்கூடிய அளவுக்கு மிகுந்த ஆவேசத்தோடு அவர்களுடைய நடவடிக்கை அமைந்திருந்தது. எதுவும் புரியாத தோழர்கள் இதுசம்பந்தமாக மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல்*

இருந்தபொழுது, அவர்களின்மீதும் காவல் துறையினர் கடுமையாகத் தாக்கியுள்ளார்கள். தோழர் சைமன் சைலஸ் அவர்கள், அரங்கசாமி, அணில் குமார் ஆகியோரை லத்தியால் அடித்தும், முகத்திலே குத்தியும் தாக்கியதோடு மட்டுமல்லாமல், அவர்கள் கைகளை பின்னால் பிணைத்து, அருகில் இருக்கக்கூடிய பஸ் ஸ்டாண்டுக்கு தர தரவென்று இழுத்துச் சென்று, உதவி ஆய்வாளர் திரு. சங்கர் அவர்கள், சைமன் சைலஸ் செயலாளர்மீது அவர்களுடைய முகத்திலே காரி உமிழ்ந்திருக்கிறார். மிகவும் நா கூசக்கூடிய அளவிற்கு வார்த்தைகளையும் பொதுமக்கள் மத்தியிலே உபயோகப்படுத்தியிருக்கிறார். அவர்களை மீண்டும் அங்கே லாக்-அப்-க்குக் கொண்டு சென்று அரை நிர்வாணப்படுத்தி அமர வைத்திருக்கிறார்கள். பத்மநாபபுரம் நீதிமன்றத்தினுடைய நடுவர் அவர்கள் முன்னிலையில் முன்னிலைப்படுத்தி இவர்களுடைய...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: நிலைமையைப் பார்த்து சிகிச்சை அளிக்க வேண்டுமென்று சொன்ன பிற்பாடும், அதிகாலை 5-00 மணிவரைக்கும் இருந்திருக்கிறார்கள். இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்து என்னவென்று சொன்னால், ஒரு குற்றவாளியைத் தேடி வருவது தவறல்ல. அப்படி தேடி வருகிறபோது, உரிய முறையில், உரிய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. மேலும், இந்தத் தோழர்கள் சைமன் சைலசுக்கு வயது 70. தோழர் அரங்கசாமிக்கு வயது 72. அணில் குமார் ஒரு cancer patient. அவர் ஆஸ்பத்திரிக்குச் சென்று வந்து அலுவலகத்தில் அமர்ந்து பேப்பர் படிப்பதற்காக வந்தவர். இந்த 3 பேரும் கடுமையாகத் தாக்கப்பட்டதும் பொதுமக்கள் மத்தியில் அந்த அளவுக்கு நடந்துகொள்வது என்பதும் மிக மிக வருத்தம் அளிப்பது மட்டுமல்ல, ஒரு கவலையளிக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது. இவர்களைப் பார்க்கச் சென்ற கட்சியினுடைய மாவட்டச் செயலாளர், தோழர் முருகேசன் அவர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பெல்லார்மின் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் சுருக்கமாக, முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: இதில் இப்போது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சம்பவத்தில் காவல் துறை அத்துமீறி நடந்திருப்பதாகத்தான் எங்களது கட்சி உணர்கிறது. ஆகவே, உரிய முறையில் காவல் உதவி ஆய்வாளர் சங்கர் அவர்கள்மீதும் மற்றவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுகுறித்த முழு விவரங்களை அறிந்துகொள்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு விசாரணையை அறிவித்து, எந்தப் பக்கம் விதிகள் மீறப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அந்த விதிகளின்படி உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன் வந்தாலும் நல்லது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, ஒரு விசாரணையை அறிவிப்பது உண்மையைத் தெரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். காவல் துறையினுடைய இத்தகைய நடவடிக்கை தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய வேண்டுகோள்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் ஒன்றிய அலுவலகத்திற்குள் 5-4-2013 அன்று போலீசார் அத்துமீறி உள்ளே நுழைந்து, அங்கிருந்த ஒன்றியச் செயலாளர் மற்றும் முன்னணி ஊழியர்களை கடுமையாகத் தாக்கி, வழக்கு புனைந்து கைது செய்யப்பட்டிருப்பதால் உருவாகியுள்ள நிலை குறித்து விவாதிக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பினைக் கொடுத்துள்ளனர். அந்த அறிவிப்பு தங்களால் அனுமதிக்கப்பட்டு, இந்த மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் உண்மை நிலவரத்தை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை பேருந்து நிலையம் அருகில், ராஜா என்பவர் பெட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். கடந்த 5-4-2013 அன்று மாலை சுமார் 4 மணியளவில் ராஜாவும், அவரது தாயார் ராஜம் என்பவரும் கடையில்

வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது, ராமன்பரம்பு பகுதியைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவாளர்களான சரவணன், கார்த்திக் மற்றும் அனில் குமார் ஆகியோர் மேற்படி கடையில் சில பொருட்களை வாங்கிக்கொண்டு பணம் கொடுக்க மறுத்ததால், அதுகுறித்து கேட்ட ராஜத்தை, சரவணன் ஆடையைப் பிடித்து இழுத்து, அவமரியாதை செய்துள்ளார். தனது தாயார் அவமதிக்கப்பட்டது குறித்து கேட்ட ராஜாவையும் மேற்படி நபர்கள் ஆயுதங்களால் தலையில் தாக்கியதுடன், அக்கடையிலிருந்த பொருட்களையும் சேதப்படுத்திவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து அறிந்த தக்கலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் சங்கர், காவலர்களுடன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரித்தபோது, ராஜம் தன்னைத் தாக்கியவர்கள் பேருந்து நிலையம் அருகிலுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அலுவலகத்திற்குள் இருப்பதாக தெரிவித்ததை அடுத்து, காவல் துறையினர் ராஜத்தை அழைத்துக்கொண்டு, அக்கட்சி அலுவலகத்திற்குச் சென்று, இதுகுறித்து விசாரித்து, எதிரிகளைக் கைது செய்ய முற்பட்டுள்ளனர். அப்போது அக்கட்சி அலுவலகத்தில் இருந்த அரங்கசாமி, சைமன் சைலஸ், கணேசன் ஆகியோர் சரவணன், கார்த்திக், அனில் குமார் உள்ளிட்ட எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு, காவல் துறையினரை அரசு அலுவல் பணியை மேற்கொள்ளவிடாமல் தடுத்து, தரக்குறைவான வார்த்தைகளால் திட்டி, உதவி ஆய்வாளர் சங்கரை தங்கள் கட்சி அலுவலகத்துக்குள் இழுத்துச் சென்று, கொடிய ஆயுதங்களால் அவரது கை மற்றும் கால் பகுதியில் கடுமையாக தாக்கிவிட்டு தப்பியோட முயன்றுள்ளனர். அப்போது அங்கிருந்த காவலர்கள் உடனடியாக உதவி ஆய்வாளரை மீட்டு, அரங்கசாமி, சைமன் சைலஸ் மற்றும் அனில் குமார் ஆகியோரை பிடித்து, காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயம் அடைந்த உதவி ஆய்வாளர் சங்கர், தக்கலை அரசு மருத்துவமனையிலும், ராஜா நாகர்கோவிலில் உள்ள தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். பின்னர், ராஜா அளித்த புகாரின்பேரில் தக்கலை காவல் நிலையத்தில் குற்ற எண் 304/2013-ல், இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 294 (B), 323, 324, 307; Tamil Nadu Property (Prevention of Damage and Loss) Act, 1992-ன் பிரிவு 3 (1); மற்றும் Tamil Nadu Prohibition of Harassment of Women Act, 1998-ன்

பிரிவு 4 ஆகியவற்றின்படி ஒரு வழக்கும், உதவி ஆய்வாளர் சங்கர் அளித்த புகாரின்பேரில் குற்ற எண் 305/2013-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148, 294 (B), 342, 332, 324, 307 ஆகியவற்றின்படி மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டு, அரங்கசாமி உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

பின்னர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாதவன், காவல் துறையினர் தங்கள் கட்சி அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து, கட்சி உறுப்பினர்களைத் தாக்கியதாகக் கொடுத்த புகாரின்பேரில் தக்கலை காவல் நிலையத்தில், குற்ற எண் 306/2013-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 448, 323, 427-ன்படி உதவி ஆய்வாளர் சங்கர் உள்ளிட்ட காவலர்கள்மீது மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

முற்பகல் 11-15

சம்பவ தினத்தன்று இரவு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் லீமா றோஸ், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் பெல்லார்மின் உள்ளிட்ட சுமார் 100 பேர் கைது செய்யப்பட்ட அரங்கசாமி உள்ளிட்டோரை விடுவிக்கக்கோரி, தக்கலை காவல் நிலையத்தை முற்றுகையிட்டு, காவல் துறையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, காவல் துறையினர் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து கலைந்து சென்றனர். காவல் நிலையத்தை முற்றுகையிட்டது தொடர்பாக, அக்காவல் நிலைய பெண் உதவி ஆய்வாளர் அளித்த புகாரின் அடிப்படையில் குற்ற எண் 307/2013-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 143, 341, 354, 188-ன்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

எதிரி கார்த்திக், மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 6-5-2013 அன்று முன் பிணை பெற்று தக்கலை நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து நிபந்தனை பிணையில் இருந்து வருகிறார். எதிரி சரவணன் தலைமறைவாக இருந்து வருகிறார். எதிரிகள் கார்த்திக் மற்றும் சரவணன் ஆகியோர் கட்சி பொறுப்பு எதிலும் இல்லை. மேலும், இவர்கள்மீது தக்கலை காவல் நிலைய குற்ற எண் 945/2012-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 341, 294 (B) 323, 324, 506 (ii)-ன்படி ஒரு வழக்கு நிலுவையில் இருந்து

2013 மே 13] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வருகிறது. எதிரி அனில் குமார் DYFI அமைப்பில் உறுப்பினராக உள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் ஒரு பெட்டிக் கடையில் வாங்கிய பொருட்களுக்கு பணம் தராமல், கடையிலிருந்த பெண்மணியை மானபங்கப்படுத்தி, அதைத் தட்டிக்கேட்ட அவரது மகன் ராஜாவையும் ஆயுதங்களால் தாக்கிவிட்டு கட்சி அலுவலகத்துக்குள் சென்று ஒளிந்து கொண்டுள்ளனர். மேலும், இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்து எதிரிகளைக் கைது செய்ய முயன்ற உதவி ஆய்வாளரையும் அக்கட்சியினர் அரசுப் பணி செய்யவிடாமல் தடுத்ததோடு, கட்சி அலுவலகத்துக்குள் இழுத்துச் சென்று கொடிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

இச்சம்பவங்களில் படுகாயம் அடைந்த ராஜா நாகர்கோவிலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் 5-4-2013 முதல் 15-4-2013 வரையிலும், உதவி ஆய்வாளர் சங்கர் தக்கலை அரசு மருத்துவமனையில் 5-4-2013 முதல் 12-4-2013 வரையிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினரின் அத்துமீறல் நடவடிக்கைகளைக் கண்டித்தும், ராஜாவை தாக்கியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் கடந்த 8-4-2013 அன்று, தக்கலை நகர வர்த்தக சங்கத்தினர் அப்பகுதியில் ஒரு நாள் கடையடைப்பு நடத்தியுள்ளனர்.

காவல் துறையினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து அக்கட்சியினர் யாரையும் தாக்கவில்லை. யார்மீதும் பொய் வழக்கும் போடவில்லை. உண்மையில் மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர்தான் எதிரிகளை கைது செய்யச் சென்ற காவல் துறை உதவி ஆய்வாளரை அலுவலகத்திற்குள் இழுத்துச் சென்று தாக்கியுள்ளனர். இச்சம்பவங்களையடுத்து அப்பகுதியில் எந்தவித பதற்றமான சூழ்நிலையும் நிலவவில்லை.

இது தொடர்பாக, பதிவு செய்யப்பட்ட நான்கு வழக்குகளையும் காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர். இவ்வழக்குகளில் விசாரணை அடிப்படையில் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.